# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1989/28 - 2016 ඔක්තෝබර් මස 19 වැනි බදාදා - 2016.10.19

*1989/28 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் குழுக்களுக்கான நடவடிக்கை
முறையும் கூட்ட நடப்பெண்ணுக்கான விதிகளும்.

அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரையின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் குழுக்களின் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறை மற்றும் கூட்ட நடப்பெண் தொடர்பாக அரசியலமைப்பின் 56(3) ஆம் உறுப்புரையின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்படும் விதிகள்.

1. இந்த விதிகள், "அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 56(3) ஆம் உறுப்புரையின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் குழு நடவடிக்கை முறை மற்றும் கூட்ட நடப்பெண்ணுக்கான விதிகள்" என அழைக்கப்படும்.

2. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தவிசாளராக பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினரொருவர் சகல கூட்டங்களுக்கும் தலைமை வகித்தல் வேண்டும்.

3. குழுக் கூட்டமொன்றுக்கு தவிசாளர் வருகைதராத சந்தர்ப்பத்தில் ஏனைய உறுப்பினர்கள் இருவரில் ஒருவர் அக்கூட்டத்திற்கு தலைமை வகித்தல் வேண்டும்.

4. கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் இரண்டு உறுப்பினர்களாகும்.

5. ஏதேனுமொரு கூட்டத்தில் இரண்டு உறுப்பினர்களினால் எடுக்கப்படும் தீர்மானம் குழுவின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றாக கருதப்படுதல் வேண்டும்.

6. குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றும் பொருட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவையும் ஆலோசித்து தேவையெனக் கருதும் தடவைகள் அக்குழுக் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

7. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஏதேனுமொரு குழுவின் செயலாளரொருவர் அரசியலமைப்பின் 56(4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒவ்வொரு கூட்டம் தொடர்பாகவும் குறிப்புக்களைப் பேணுதல் வேண்டும். அத்தோடு அக்கூட்டங்களின் உண்மையான செயல் அறிக்கை குறிப்புக்கள் அங்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

8. அவ்வாறு பேணப்படும் செயல் அறிக்கை குறிப்புக்கள், அவை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், அவ்வாறான ஏதேனுமொரு குழுக் கூட்டமொன்றின் செயல் அறிக்கை குறிப்புக்களின் உண்மையான அறிக்கையாக அது ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

9. 2009, பெப்புருவரி மாதம் 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதிகளின் 234 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், குழுவொன்றின் தீர்மானத்தினால் அதிருப்திக்குள்ளாகும் எவரேனுமொரு அரசாங்க உத்தியோகத்தரால் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு செய்யப்படும் ஏதேனும் மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

10. இந்த விதிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படாத நடைமுறை விதிகளுக்கு இயைபுடைய ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் முடிவு செய்தல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எச்.எம்.காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.
2016 ஒற்றோபர் 18.

11-133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.